ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1798/14 - 2013 පෙබරවාරි මස 19 වැනි අඟහරුවාදා - 2013.02.19

*1798/14 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாணத்தின் முதலமைச்சரும் நிதி மற்றும், திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி , மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு பொருளாதார மேம்பாடு மற்றும் வர்த்தக அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், கீழ் அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஆகிய காணி அபிவிருத்தி நியதிச்சட்டம் 2012.08.07 ஆந் திகதி மேல் மாகாண சபையின் மூலம் சபை அங்கீகரிப்பின் பின் அது தொடர்பாக 2012.12.13 ஆந் திகதி மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களின் சம்மதம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல்,
சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,
மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு
பொருளாதார மேம்பாடு மற்றும் வர்த்தக அமைச்சரும்
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
''சிராவஸ்த்தி மந்திர'',
கொழும்பு 07,
2013, பெப்புருவரி 11.

**மேல் மாகாணத்தின் 2012 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க காணி அபிவிருத்தி நியதிச்சட்டம்**

மேல் மாகாணத்திலுள்ள அரசாங்க காணி, அரசாங்க அல்லது மாகாண சபை மூலம் உபயோகத்திற்கு எடுப்பதை முறைப்படி செய்வதற்காக யாராவது ஒரு பிரசைக்கு அல்லது அமைப்புக்கு வழங்குதல் சம்பந்தமாக அந்த காணி பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாக மாகாண சபையின் ஆலோசனை சம்பந்தமாக விதிமுறை திட்டம் அதற்கு இடைநேர் விளைவான ஏற்பாடுகள் காரணம் சம்பந்தமாகவும் மேல் மாகாணத்தின் 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க காணி அபிவிருத்தி நியதிச் சட்டத்தை வலுவிலக்கச்செய்தல் தொடர்பாகவுள்ள நியதிச்சட்ட கொள்கையாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண சபை மூலம் இவ்வாறு பணிக்கப்பட்டுள்ளது.

1. இந்த நியதிச்சட்டம் மேல் மாகாணத்தின் 2012 ஆம் ஆண்டின் 04 இலக்க காணி அபிவிருத்தி கொள்கை என்று அறிமுகப்படுத்தப்படுவதுடன், மேல் மாகாணத்தில் ஆளுநரின் அனுமதிபெற்ற திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். *(சுருக்கப் பெயரும் நடைமுறைப்படுத்தப் படும் திகதியும்.)*

2. இந்த நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி வரைக்கும், அரசியலமைப்பு திட்டத்தின் விதிகளுக்கு கீழ்படும் மாகாண சபை காணிகள் சம்பந்தமாக உபயோகப்படுத்துகின்ற எந்தக் காணியாகினும், அது மாகாண சபைக்கு அரசியல் அமைப்பு சட்டத்திற்கு ஒன்பதாவது பட்டோலையின் 1 வது பட்டியலில் (மாகாண சபை பட்டியல்) II அத்தியாயத்தில் 1 இல் 1.2 இன் கீழ் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற காணி ஒன்றையே என்று கவனிக்க வேண்டியுள்ளது. *(மாகாண சபை விடயங்கள் சம்பந்தமாக உபயோகப்படுத்தப் படுகின்ற காணி.)*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*மாகாண சபை மூலம் அரசாங்கக் காணி பெறுதல்.*

3.(1) ஏதாவதொரு மாகாண சபை ஒரு விடயம் சம்பந்தமாக புதிதாக அரசாங்கக் காணி தேவை ஏற்படுமானால் அந்தக் காணியை மாகாண சபைக்கு பெற்றுக்கொடுக்க மாகாண காணி ஆணையாளர் மூலம் காணி ஆணையாளர் நாயகத்திடம் கேட்க வேண்டியுள்ளது.

(2) எந்தவொரு மாகாண சபை விடயங்கள் சம்பந்தமாக அரசாங்கக் காணி பகுதி பெற்றுத்தரும்படி மாகாண காணி ஆணையாளரிடத்தில் கேட்குமிடத்து அவர் மூலம் தமக்கு போதுமான அளவு தெளிவு ஏற்படும் அளவுக்கு தொடர்புடைய கேள்வியானது சம்பந்தமாக பரிசீலனை செய்தபின்பு எந்தக் காணி அந்த விடயம் சம்பந்தமாக பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடையது என்று திருப்திக்குட்படுவதானால் அமைச்சரின் உடன்பாட்டுடன் அந்த கேள்வி காணி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) எந்தவொரு மாகாண சபை விடயங்கள் தொடர்பாக மேல் (1) உப பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற வேண்டுகோளுக்கிணங்க மாகாண சபைக்கு கிடைக்கின்ற அரசாங்க காணியொன்றை அந்த விடயம் தொடர்பாக உபயோகத்திற்கு எடுத்தலாகும். இந்த விடயம் தொடர்பாக மாகாண சபைக்கு கிடைக்கின்ற காணியொன்றை வேறு விடயம் தொடர்பாக உபயோகத்திற்கு எடுப்பதற்கு தேவை ஏற்பட்டால் அரச காணி நிர்வாகம் செய்யப்படுகின்ற சட்டங்களுக்கு அமைவாக நடைபெற வேண்டும்.

4.(1) மாகாண சபைவிடயங்கள் தொடர்பாக தேவையாகவுள்ள அந்தப் பகுதியினுள் இருக்கும் அரசாங்கக் காணி அரசாங்கம் மூலம் பெற்றுக்கொடுத்ததன் பின்பு மகாண சபை மூலம் அந்த அரசாங்கக் காணி அந்த காரணத்தை கட்டுப்படுத்துகின்ற சட்டம் மற்றும் நியதிச்சட்டங்களுக்கு அமைவாக நிர்வாகம் செய்வதற்கும் கட்டுப்பாடு செய்வது மற்றும் உபயோகத்திற்கு எடுத்தல் வேண்டும்.

(2) அரசாங்க காணியொன்று அரசாங்கத்தின் மூலம் உபயோகத்திற்கு எடுப்பது சம்பந்தமாக மாகாண சபையின் உடன்பாடு பெற்றுக்கொடுக்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை (செயல்படிமுறை) விதிமூலம் குறித்தொதுக்க வேண்டியுள்ளது.

5. மாகாண சபை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்திற்குள் இருக்கும் அரசாங்க காணி
(அ) குடியிருப்பு சம்பந்தமாக
(ஆ) விவசாய நடவடிக்கையில் ஈடுபடுதல் தொடர்பாக

அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கு மாகாண காணி ஆணையாளருக்கும் அதிகாரம் உள்ளது.

*அரசாங்கம் உபயோகத்திற்கு எடுக்கப்படுகின்ற அரச காணி.*

6.(1) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட அல்லது இணையான பட்டியலில் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக அரசாங்க காணியொன்று உபயோகத்திற்கு எடுப்பதற்கு அரசாங்கம் மூலம் கேட்கும்போது அந்த காணி –

(அ) தேவையான காரணம்
(ஆ) அதன் அமைவிடம்
(இ) அதன் பரப்பளவு
(ஈ) எல்லை

ஆகிய விபரங்கள் உள்ளடங்களாக எழுத்துமூல வேண்டுகோள் ஒன்று கேட்கும் பட்சத்தில் மாகாண சபை மூலம் அரசாங்கத்திடம் கேட்க வேண்டும்.

(2) மேல் (1) உப பிரிவில் குறிப்பிட்டபடி வேண்டுகோள் மாகாண சபைக்கு கிடைத்த பிறகு

(அ) அந்த வேண்டுகோள் நிறைவேற்ற முடியுமானால் அது தொடர்பாக 42 தினங்கள் கழிவதற்கு முன் அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

அல்லது

(ஆ) அந்த வேண்டுகோள் பூர்த்திசெய்ய முடியாத சந்தர்ப்பத்தில் அந்த காணிக்குப்பதிலாக மாற்று காணியொன்று அரசாங்கத்திற்கு முன்மொழிதல்

அல்லது

மாகாண சபையின் பணியாகும்.

(3) அரசாங்க காணியொன்று அரசாங்கத்தால் உபயோகத்திற்கு எடுப்பது தொடர்பாக மாகாண சபையின் ஒருமைப்பாடு பெற்றுக்கொடுக்கும்போது பின்பற்ற வேண்டிய செயற்பாட்டுப் படிமுறை மாகாணசபை மூலம் உருவாக்கப்படல் வேண்டும்.

7. அரசாங்கத்தின் உபயோகம் தொடர்பாக மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதாவதொரு காணித்துண்டொன்றை பயன்படுத்துவதற்காக மாகாண சபையின் இணக்கத்தை பெற்றுக்கொடுக்கப்படும்போது தொடர்புடைய காணி சுதந்திரமாக இருப்பதானாலும் *மாகாண சபையின் இணக்கத்தை பெற்றுக்கொடுக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.*

(அ) வேறு செயற்பாடு தொடர்பாக ஒதுக்கி வைக்கப்பட்டதாக இல்லாவிட்டால்,

(ஆ) மாகாணத்தில் விசேடமான ஏதாவது பொருளாதார, கலாசார, தொல்பொருள் விஞ்ஞான அல்லது சுற்றாடல் முக்கியத்துவம் உள்ளது என்ற விடயம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

8. இந்த நியதிச்சட்டம் செயற்படுத்த ஆரம்பமாகும் திகதி வரை அரசாங்கம் மூலம் ஒதுக்கப்பட்ட அல்லது இணை விடயமொன்று தொடர்பாக உபயோகத்திற்கு எடுத்திருந்த எந்தவொரு காணியொன்று அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கமைய மாகாண சபையில் விசாரித்து அரசாங்கம் மூலம் உபயோகத்திற்கு எடுக்கப்பட்ட காணியொன்றாக கணிக்க வேண்டும். *அரசாங்கம் மூலம் உபயோகத்திற்கு எடுக்கப்பட்ட காணி.*

9. (1) காணித்துண்டொன்றை வழங்குவது தொடர்பாக நபர்களை தேர்ந்தெடுத்தல் காணிக்கச்சேரி மூலம் செயற்பட வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட (1) உப பிரிவுக்கு கீழ் காணிக் கச்சேரி ஒன்று நடைமுறைப்படுத்தும்போது பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

(அ) குடியிருப்பு பதிவு சம்பந்தமாகவும் அல்லது விவசாய நடவடிக்கை சம்பந்தமாகவும் எந்தவொரு காணித்துண்டு ஒன்றை வழங்குவது சம்பந்தமாக பிரதேச செயலாளர் நினைக்கின்ற சந்தர்ப்பத்தில் காணிக் கச்சேரி ஒன்றை நடைபெறச் செய்வதற்கு அது சம்பந்தமாக திட்ட அறிக்கை, காணிக்கச்சேரி பிரேரணை காணிக்கச்சேரி அறிவித்தல் பிரதி அத்துடன் காணி வரைபடம் /உப வரிசை முறைப்பிரதி ஒன்று மாகாணக் காணி ஆணையாளருக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியின்படி அனுமதி வழங்கப்பட்ட காணிக் கச்சேரி விளம்பர மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்ட பிரதேசத்தினுள் பூரண விளம்பரப்படுத்துதல் சம்பந்தமாக பிரதேச செயலாளர் போதுமென்று கருதும் அளவுக்கு பிரபல்யப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரிக்கு விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்க போதுமான கால அளவுக்கு இடம் வைத்து, குறைந்தளவு முப்பது நாட்களாவது காலம் பெற்றுக்கொடுத்து காணிக்கச்சேரி அறிவித்தலை விளம்பரப்படுத்த வேண்டும்.

(இ) விளம்பரப்படுத்தப்பட்ட காணிக் கச்சேரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறிப்பிட்ட இடத்திலும், குறிப்பிட்ட நேரத்தில் காணிக் கச்சேரி நடைபெற வேண்டும். இந்த விடயங்களில் ஏதாவது மாற்றம் தேவையேற்பட்டால் அதை மாற்றுவது சம்பந்தமாக மாகாண காணி ஆணையாளரின் முன்பே எழுத்து மூல அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அந்த அனுமதியை மாற்றிக்கொள்வது காணிக் கச்சேரி நடைபெறுகின்ற திகதிக்கு பத்து தினங்களுக்கு முன்பு காணிக்கச்சேரி அறிவித்தல் விளம்பரப்படுத்திய முறைப்படியே விளம்பரப்படுத் தப்படல் வேண்டும்.

(ஈ) காணிக் கச்சேரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்பத்திரங்களில் தகுதியானவர்களை தெரிவு செய்ய வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பின்பு கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்பத்திரங்கள் தொடர்பாக விண்ணப்பதாரி மூலம் பிரதேச செயலாளர் திருப்திக்குள்ளாகும் வகையில் காரணம் சமர்ப்பித்து இருந்தால், வார இறுதி விடுமுறை தினம் தவிர்ந்த மூன்று (03) வேலை நாட்கள் தாமதமாக கிடைத்த விண்ணப்பப் பத்திரமாக கருதி அனுமதி வழங்குவதற்கு பிரதேச செயலாளருக்கு முடியும்.

(உ) காணிக் கச்சேரி நடத்தி பதினான்கு நாட்களுக்குள் காணி பெறுவதற்கு தகைமையுடையவர்களின் பெயர்ப்பட்டியல் முதன்மை அடிப்படையில் வரிசைக் கிரமத்தில் வெளிப்படுத்தி அத்தெரிவுகள் சம்பந்தமாக எதிர்ப்பு அழைப்பு விடுக்க வேண்டும். காணிக் கச்சேரி அறிவித்தலை விளம்பரம் செய்த முறைப்படி இந்த தெரிவு பெயர்ப்பட்டியல் விளம்பரப்படுத்தல் வேண்டும்.

(ஊ) எதிர்ப்பு தோன்றியிருந்தால் குறிப்பிட்ட திகதிக்கு குறிப்பிட்ட நேரத்தில் தனிப்பட்ட முறையில் சமுகமளித்து எதிர்ப்பை காட்டுவதற்கு, எதிராளிகளுக்கு பதிவுத்தபால் மூலம் அறிவிக்க வேண்டும். எதிர்ப்பு பரிசீலனைக்கு சமுகமளிக்கும்படி எதிர்ப்புக்குட்பட்ட நபர்களுக்கு தபால் மூலம் அறிவிக்க வேண்டும்.

(எ) எதிர்ப்பு பரிசீலனை முடிந்து 14 நாட்களுக்கு காணி வழங்குதல் சம்பந்தமாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் காணிக்கச்சேரி விளம்பரம் செய்த முறைப்படியே விளம்பரம் செய்ய வேண்டும்.

*அனுசரனை அடிப்படையில் தெரிவு செய்தல்.*

10. எந்தவொரு விசேட செயல்திட்டம் செயற்படுத்துவதற்கு காணித்துண்டொன்றை வழங்குவது சம்பந்தமாக எந்த நபரினதோ அல்லது அமைப்பு ஒன்றினதோ அனுசரனை முறைப்படி தெரிவு செய்யும்போது மாகாண சபையின் உடன்பாட்டை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் உண்டு.

11. மேல் மாகாண சபையினுள் இருக்கும் அரசாங்க காணி வழங்குவதற்கு இந்த மாகாண சபையின் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல் செயற்படும்போது கீழ் குறிப்பிடப்படும் செயன்முறை பின்பற்றப்படுதல் வேண்டும் ;

(அ) காணியை அடையாளம் காணுதல்;
(ஆ) காணியை அளந்து அடையாளப்படுத்தல்;
(இ) நோக்கத்துக்கு உட்பட்ட காரணத்துக்கு தொடர்புபட்டதாக சிபார்சும் அறிக்கையும், பிரதேச செயலாளர் மூலம் மாகாணக் காணி ஆணையாளர் பெறுதல் வேண்டும்.
(ஈ) மாகாணக் காணி ஆணையாளர் அந்த சிபார்சையும், அறிக்கையும் கிடைத்த பின்பு முறையான நுண்ணாய்வுக்கு/விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.
(உ) நடைமுறையிலுள்ள சட்டமூலம், சட்ட, நியதிச்சட்டம் மற்றும் காணிக்கொடுக்கல் வாங்கல் திட்டங்களுக்கு அமைவாக அந்த சிபாரிசு அறிக்கை மாகாணக் காணி செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
(ஊ) மாகாண அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொள்ளுதல்.
(எ) அனுமதியைப் பெற்றவுடன் வழங்குதல் செயற்பாட்டின் இறுதி நடவடிக்கைகள் சம்பந்தமாக காணி ஆணையாளர் நாயகத்திற்கு மாகாண காணி ஆணையாளர் மூலம் சிபாரிசைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

*கொடுப்பனவு பத்திரம் வழங்குதல்.*

12. எந்தவொரு காணித்துண்டுக்கும் அனுமதிப்பத்திரம் பெறுகின்ற நபரொருவர் மூலம் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனை எல்லாவற்றையும் நிறைவேற்றி உள்ள சந்தர்ப்பத்தில் அந்தக் காணிக்குப் (பதிலாக கொடுப்பனவுப்பத்திரம் கிடைப்பதற்கு மேலதிக நடவடிக்கை செய்வதற்காக அந்நபர் தகுதி பெற்றவராவார்.

*மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களம்.*

13. மேல் மாகாணத்தினுள் அரசாங்கக் காணி கட்டுப்பாடும் நிர்வாகமும் செய்தல் சம்பந்தமாக இதன்பிறகு மேல் மாகாண ஆணையாளர் திணைக்களம் என்று அறிமுகப்படுத்துகின்ற மேல் மாகாண சபை காணி ஆணையாளர் திணைக்களம் ஒன்று செயற்படல் வேண்டும்.

*மாகாணக் காணி ஆணையாளர் பதவி ஒன்றை உருவாக்குதல்.*

14.(1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தங்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்ற அதிகாரம் அரசாங்க கடமை, பொறுப்பு செயற்பாட்டையும் சரியான முறையில் நிறைவேற்றுவது சம்பந்தமாக மேல் மாகாணத்தினுள் இருக்கும் அரசாங்க காணி நிர்வாகமும் கட்டுப்பாடும் சம்பந்தமாக காணி அதிகாரத்துக்கு ஒதுக்கப்பட்டதுடன் குறித்தொதுக்கி இருக்கின்ற அதிகாரமும், அரசாங்கக் கடமையையும் வழங்கி நிறைவேற்றுவது சம்பந்தமாக காணி அதிகாரிகளின் நடவடிக்கை பொதுவாக மேற்பார்வை செய்தலும், செயற்பட வைத்தல் சம்பந்தமாக, பொறுப்பு சொல்லக்கூடிய மாகாணக் காணி ஆணையாளர் பதவி ஒன்று இருக்க வேண்டியதாகும்.

(2) மாகாணக் காணி ஆணையாளர் செயலாளரின் நிர்வாகத்திற்கு கீழ்பட்டு சுயமாக பதவியின் நடவடிக்கை செய்ய வேண்டும்.

15.(1) இந்த நியதிச்சட்டத்தில் செயற்பாடுகள் சம்பந்தமாக இடை இடையே தேவைப்படக்கூடிய வகையில், பிரதி, உதவி மாகாண காணி ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டி உள்ளது.

(2) இந்த நியதிச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு கட்டளைகளின் கீழ் மாகாணக் காணி ஆணையாளரிடத்திலுள்ள ஏதாவது அதிகாரம் அல்லது செயற்பாடுகள் மாகாணக் காணி ஆணையாளரின் சாதாரண அல்லது விசேட ஆலோசனையின்கீழ் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு, செயற்படுத்துவதற்கு அல்லது செய்வதற்கு ஏதாவது பிரதி மாகாணக் காணி ஆணையாளர் ஒருவர் அல்லது உதவி மாகாணக் காணி ஆணையாளருக்கு சாதாரணமாக அல்லது விசேடமாக அதிகாரம் வழங்குவதற்கு, மாகாணக் காணி ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது.

16.(1) மாகாணத்தினுள்ளோ அல்லது மாகாணத்தினுள் இருக்கும் ஏதாவது பிரதேச செயலாளர் கோட்டம் சார்பாகவோ, அல்லது ஒரு காணி அதிகாரியொருவரோ அல்லது பலரோ நியமிக்க முடியும்.

(2) அவ்வாறான எல்லா அதிகாரிகள் மூலமும் தாங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்ற மாகாணத்திற்கோ அல்லது பிரதேச செயலாளர் கோட்டத்திற்கோ இந்நியதிச்சட்டத்தின்கீழ் பிரதேச செயலாளரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட அரச கடமையும் அதிகாரம் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் ஏதாவதொன்று அல்லது மாகாணக் காணி ஆணையாளர் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற முறைப்படியும் அளவு செயற்பட்டு நடைமுறைப்படுத்தி தொழிற்படுத்தலாகும்.

(3) காணி அதிகாரிக்கு தங்களிடத்தில் காணி நிர்வாகம் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட அரசாங்க கடமையை நிறைவேற்றுவது சம்பந்தமாக மாகாணக் காணி ஆணையாளர் மூலம் காலத்துக்கு காலம் சாதாரணமாகவோ விசேட குறித்தொதுக்கல் செய்ய முடியும். மேலும் அவ்வாறான அரச கடமை சம்பந்தமாக ஏதாவது சந்தேகம் அல்லது கஷ்ட நிலைமைகள் ஏற்படுமிடத்து அது சம்பந்தமாக

தீர்மானம் ஒன்று எடுப்பது சம்பந்தமாக அந்த காரணத்தை தங்களிடத்தில் சமர்ப்பிக்கும்படி, தீர்மானிப்பதற்கு மாகாணக் காணி ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது.

(4) மாகாணக் காணி ஆணையாளரின் எவ்வாறான குறித்தொதுக்கலோ அல்லது தீர்மானம் சந்தர்ப்பத்திற்கு அமைய காணி அதிகாரிகள் மூலம் பின்பற்றுதலும் நடவடிக்கையில் ஈடுபடுதலும் செய்ய வேண்டும்.

காணித்துண்டொன்றுக்கு பதில் ஆள் ஆகுவதற்கு தகுதியின்மை ஏற்படுமிடத்து அந்தக் காணி அரசுக்கு சுவீகரித்தல்.

17.(1) தொடர்பான சட்டத்தில் அல்லது நியதிச்சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எந்தவொரு அனுமதிப்பத்திர பெறுநர் தான் மரணத்தின் பின் உடைமையாளர் பெயர் குறிப்பிடப்படாவிட்டால் அல்லது தொடர்புடைய சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைய காணி பதிலாகப் பெறுவதற்கு உரிமையுள்ள ஒருவர் இல்லாவிட்டால் அல்லது அவ்வாறு பதிலுக்கு விருப்பமில்லாமல் அல்லது அந்தக் காணி அரசாங்கத்திற்கு மாற்றியதாக கணிக்க வேண்டும்.

(2) இவ்வாறான காணியின் பயனை பிரதேச செயலாளர் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நிபந்தனையை மீறிய அனுமதிப் பத்திரம் பெறுநருக்கு அறிவித்தல் அனுப்புதல்.

18. அனுமதிப் பத்திரத்தில் உட்பட்ட எந்தவொரு நிபந்தனையொன்றை பின்பற்றுவதற்கு அனுமதிப்பத்திர உரிமையாளரால் முடியாமல் போவதை பிரதேச செயலாளருக்கு தெரிந்து விட்டால் அந்த அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யாமல் இருப்பதற்கு பல காரணங்கள் தெரிவிப்பது தொடர்பாக சந்தர்ப்பமொன்றை பெற்றுக்கொடுப்பதில் அறிவித்தலொன்று குறிப்பிட்ட படிவத்திற்கு அனுமதிப்பத்திர பெறுநருக்கு அனுப்புவதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த பரிசீலனை செய்த பின்பு நேரம் மற்றும் இடம் அந்த அறிவித்தலில் நிச்சயமாக குறிப்பிடல் வேண்டும்.

காரணம் தெரிவிப்பதற்கு கொடுக்கப்படும் காலம்.

19. மேல் 18 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்கு முன்னைய நாளாகக் கூடாது.

அறிவித்தல் கொடுத்தல் மற்றும் காட்சிப்படுத்தல்.

20.(1) மேல் 18 ஆகிய பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலின் புகைப்பட பிரதியொன்று அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு பெற்றுக்கொடுத்தலோடு, அங்கு மேலும் பிரதியொன்றை அந்தக்காணியின் பிரபல்யமான இடத்தில் காட்சிப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்த வேண்டும். காணி மற்றும் தொடர்பாக உள்ள அல்லது இரத்து செய்வதற்கு அதிகாரம் உள்ளது. அல்லது மதிக்கக்கூடிய எந்தவொரு நபருக்கும் அந்த அறிவித்தலின் பிரதியை அளிப்பதற்கு ஒழுங்கு செய்ய முடியும்.

(2) மேல் 18 ஆம் பிரிவின்கீழ் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திர உடமையாளர் மேற்கொள் வதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் அவருடைய குடும்பத்தில் உறுப்பினருக்கு அல்லது அவர் மற்றும் வாழுகின்ற வேறு ஒருவருக்கு வழங்குதல் அனுமதிப்பத்திரம் உரியவருக்கு உரிய முறையில் வழங்கப்பட்டதாக கணிக்க வேண்டும். அவ்வாறு அளிப்பதற்கு அல்லது ஒருவர் இல்லாவிட்டால் அறிவித்தலின் பிரதியொன்று அனுமதிப்பத்திர உரிமையாளரின் வீட்டில் அல்லது அதற்கு அருகில் பிரசித்தி பெற்ற இடத்தில் ஒட்டி பிரபல்யப்படுத்தல் அது சரியான முறையில் வழங்கியதாக கணிக்க முடியும்.

(3) அறிவித்தல் மேல் எந்த முறையில் வழங்கப்பட்டதென்பது அந்த விடயம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரி மூலம் பிரதேச செயலாளருக்கு எழுத்து மூல அறிக்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

அனுமதிப்பத்திர உரிமையாளர் சமுகமளிக்காமல் இருக்குமிடத்து நிராகரிப்புச் செய்தல்.

21. அனுமதிப்பத்திர உரிமையாளர் 18 ஆம் பிரிவின்கீழ் உள்ள அறிவித்தலின் பிரகாரம் விடயம் கூறுவதற்கு முன்வராவிட்டால் அல்லது முன்வந்து அனுமதிப்பத்திரம் செல்லுபடியற்றதாக்குவதற்கு எதிராக விடயங்கள் சொல்லுவதற்கு இல்லையென்று சொன்னால் அல்லது அறிவித்தல் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளதென்பது மற்றும் எந்தவொரு நிபந்தனையை மீறியதாக பிரதேச செயலாளர் திருப்திப்பட்டால் அந்த அனுமதிப்பத்திரம் வலுவற்றதாக கட்டளை பிறப்பிப்பதற்கு அவருக்கு முடியும். எவ்வாறானாலும் அவ்வாறான கட்டளையொன்றை செய்ய வேண்டியது அறிவித்தலில் குறிப்பிட்ட திகதியிலிருந்து 28 நாட்கள் கழிந்த பிறகு மட்டுமே.

(2) 18 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிட்ட திகதியில் சமுகமளிப்பதற்கு முடியாமல்போன எந்தவொரு அனுமதிப்பத்திர உரிமையாளர் அந்த குறிப்பிட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் விண்ணப்பம் செய்து நிராகரிக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் காட்ட முடியுமென்றும், பரிசீலனை திகதியில் தவிர்க்க முடியாத காரணமொன்றிற்காக சமுகமளிப்பதற்கு முடியாவிட்டால் பிரதேச செயலாளரிடத்தில் காரணம் காட்டினால் காரணம் காட்டியது தொடர்பாக வேறு திகதியொன்று நிச்சயிக்க முடியும்.

அனுமதிப்பத்திர உரிமையாளர் சமுகமளித்து காரணம் தெரிவிக்கும் பட்சத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை.

22.(1) மேல் 18 ஆம் பிரிவின் கீழ் அல்லது 21(2) ஆம் பிரிவின் கீழ் அல்லது நிச்சயிக்கப்பட்ட திகதியில் அனுமதிப்பத்திர உரிமையாளர் சமுகமளித்து தங்கள் அனுமதிப்பத்திர நிராகரிப்பு செய்யாமலிருப்பதற்கு காரணம் காட்டப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பிரதேச செயலாளர் மூலம் விடயங்கள் பரீட்சிப்பதன் பின்பு எந்தவொரு நிபந்தனை ஒன்றை மீறி உள்ளதாக திருப்திக்கு உட்பட்டால் அவர் மூலம் அனுமதிப்பத்திரம் நிராகரிப்பு செய்வதற்கு கட்டளையிட முடியும்.

(2) மேற்கூறப்பட்ட பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட பரீட்சை பிற்போடுதல் பிரதேச செயலாளருக்கு முடியும் என்பதோடு அவ்வாறான பிற்போடுதல் அடுத்த பரீட்சை நடைபெறுகின்ற திகதி நேரம் மற்றும் இடம் அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.

(3) பிரதேச செயலாளர் மூலம் 21 அல்லது 22 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு முன் சாட்சி விசாரிக்க வேண்டும். சத்தியபிரமாணம் அல்லது உறுதிப்படுத்தியோ சாட்சி பெற்றுக்கொள்ள வேண்டும்.

நிராகரிப்புச் செய்வதற்கான கட்டளையிடும் திகதி

23. பிரதேச செயலாளர் மூலம் நிராகரிப்பு செய்து கட்டளை பிறப்பிக்கப்பட்ட திகதி, அந்தக் கட்டளையில் குறிப்பிடப்பட வேண்டும்.

அனுமதிப்பத்திரம் பெறுநர் கட்டளை கையளித்தல் மற்றும் காட்சிப்படுத்தல்.

24.(1) பிரதேச செயலாளர் மூலம் 22 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட கட்டளையின் பிரதியொன்று தொடர்புடைய அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு உடனடியாக வழங்கப்படுவதோடு, அதன் பிரதியொன்று தொடர்புடைய காணியில் பிரபல்யமான இடத்தில் ஒட்டி காட்சிப்படுத்த வேண்டும். இந்த கட்டளைக்கு எதிராக 30 நாட்களுக்குள் மாகாண காணி ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்வதற்கு முடியும் என்பதையும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(2) 22 ஆவது பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றை தொடர்புடைய கட்டளை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்துமூலம் சமர்ப்பிக்க வேண்டும். காலத்தை கணிக்கும்போது கட்டளை வழங்கிய திகதியை கணக்கெடுத்தல் கூடாது.

25. 24 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடு ஒன்று தொடர்புடைய கட்டளையின் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் காலத்தை கணிக்கும்போது கட்டளை வழங்கப்பட்ட திகதி கணக்கெடுக்கக் கூடாது.

26. மேன்முறையீட்டாளர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர் இருக்கும்போது மேன்முறையீடு கணித்துப் பார்த்த பின்பு மாகாண காணி ஆணையாளர் மூலம்

(அ) மேலதிக பரீட்சை செய்வதற்கு காரணம் சமர்ப்பிக்க வைப்பதோடு அல்லது சாட்சி பரீட்சிப்பதற்கோ அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு இடமளித்து கட்டளையை இல்லாது செய்வதற்கு அல்லது

(இ) கட்டளை திருத்தம் செய்வதற்கோ அல்லது

(ஈ) கட்டளை நிரந்தரமாக்குவதற்கோ அல்லது

(உ) சாதாரணம் மற்றும் நியாயபூர்வமான வேறு கட்டளையொன்று வழங்குவதற்கு அல்லது செயற்படுத்த வேண்டும்.

மாகாணக் காணி ஆணையாளரின் தீர்மானத்தை அறிவித்தல்.

27.(1) மாகாணக் காணி ஆணையாளர் மூலம் 26 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட தீர்மானம் பிரதேச செயலாளருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

(2) 26 வது பிரிவின்கீழ் மாகாண காணி ஆணையாளரின் ஆலோசனை எல்லா விடயங்கள் தொடர்பாகவும் கடைசி மற்றும் இறுதியானதாகும்.

எவ்வாறானாலும் மாகாண காணி ஆணையாளர் தீர்மானித்தல் திருப்தியடையாது இருப்பவருக்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்க முடியும்.

28. இந்த பந்தியின்கீழ் செயற்படுகின்ற எந்தவொரு செயலின்போதும் தனிப்பட்ட முறையில் அல்லது பிரதிநிதியொருவர் மூலமாக விடயங்கள் சொல்வதற்கு அனுமதிப்பத்திர உடமையாளருக்கு முடியுமாக இருக்க வேண்டும்.

29.(1) இந்நியதிச்சட்டத்தின் நோக்கத்திற்கும் செயற்பாடுகளுக்கும் தீங்கு ஏற்படாதபடி மாகாணத்திற்குள்ளாக அமைந்துள்ள அரசாங்க காணியும் மாகாண சபைக்கு கிடைத்து இருக்கின்ற காணிகளின் குறிப்பிட்ட அளவுக்கு இசைவாக தீர்வை வரி, தண்டப்பணம், வருமானம் வசூலித்துக் கொள்வதற்கு மாகாண சபைக்கு அதிகாரம் உள்ளதுடன் அப்பணம் மாகாண சபை நிதிக்கு வைப்பிலிட வேண்டும்.

(2) மாகாண சபைக்கு கிடைத்த காணி மற்றும் மாகாண சபை அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அரசாங்க காணி அனுமதிப்பத்திரமோ அல்லது குத்தகை உறுதியின்படி அளிப்புச் செய்யும்போது அறவிடவேண்டிய கட்டணம் தீர்மானிப்பதற்கு அரசாங்கக் காணி கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மாகாண சபைக்கு அதிகாரம் உள்ளது.

30. மாகாணத்தினுள் அமைந்துள்ள அரசாங்க மற்றும் மாகாண சபை காணி சம்பந்தமான விபரப்பட்டியல் முறைமையொன்று தொடர்ச்சியான மாற்றத்துடன் செயற்படுத்திக்கொண்டு செல்லுதல் மாகாண காணி ஆணையாளரின் பொறுப்பாகும். அந்த விபரம் பிரதேச மாவட்ட அத்துடன் மாகாண மட்டத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். மாகாணத்தினுள் அமைந்துள்ள அரசாங்கத்தின் உபயோகத்திற்கு எடுக்கப்படுகின்ற அரசாங்க காணியும் மாகாண சபை மூலம் உபயோகத்திற்கு எடுக்கப்படுகின்ற அரசாங்க காணி சம்பந்தமான குறிப்பிட்ட விபரம் இந்த விபர முறைமைக்குள் உட்படுத்தப்படல் வேண்டும். காணி விபர முறைமை.

31. மாகாணத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு அரசாங்க அல்லது மாகாண சபைக் காணியொன்று பரீட்சித்துப் பார்ப்பதற்கு அல்லது தகவல் பெற்றுக்கொள்வதற்கு எந்தவொரு தினத்திலும் மு.ப. 6.00 தொடக்கம் பி.ப. 6.00 க்கும் இடையில் எந்தவொரு நேரத்திலும் அந்தக் காணிக்கு உட்பிரவேசித்தல் மாகாண காணி ஆணையாளரோ அவர் மூலம் முறைப்படி எழுத்துமூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட எந்தவொரு அல்லது ஒருவருக்கு அதிகாரம் உள்ளது. அனுமதிப்பத்திரம் மூலம் கொடுக்கப் பட்ட காணிக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ள அதி காரிக்கு உட்பிர வேசிக்க முடியும் என்பது.

32.(1) மாகாண சபைக்கு கிடைத்த காணிக்கு அந்தக் காணிக்கு பதிலாக வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப்பத்திரம் ஒன்று அல்லது சட்டபூர்வமான எழுத்துமூலம் இல்லாமல் காணி தொடர்பாக சட்ட ரீதியற்ற நடவடிக்கை.

(அ) சுத்தம் செய்தல் ;
(ஆ) வேலி அடைத்தல்;
(இ) மண் புரட்டுதல்;
(ஈ) தோண்டுதல்;
(உ) பயிர்செய்தல்;
(ஊ) எந்தவொரு கட்டடம் அல்லது அதன் பகுதி அமைத்தல்;
(எ) குடியிருத்தல்.

ஆகிய எந்தவொரு செயற்பாடு செய்கின்ற ஒருவர் நியதிச்சட்டத்தின்கீழ் குற்றம் செய்கின்றபோது, நீதிவான் நீதிமன்றத்தில் சுருக்க வழக்கு விசாரணையின் பிறகு குற்றவாளியாக்கல் வேலையுடன் கூடிய ஒரு வருடத்துக்கு குறையாத மூன்று வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை மற்றும் அல்லது ஆயிரம் ரூபாவுக்கு குறையாமலும், பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாமலும் தண்டப்பணம் மற்றும் அல்லது இந்த தண்டனை இவற்றில் ஒன்றாக உட்படுத்த முடியும்.

(2) மேல் (1) ஆம் உப பிரிவின்கீழ் செயல் செய்வது தொடர்பாக எந்தவொரு நபருக்கு விதிக்கக்கூடிய தண்டனைக்கு மேலதிகமாக அவர் அரசாங்க காணி பெறுவதற்கு தகுதியற்றவராவதுடன், கறுப்பு பட்டியல்படுத்தப்படல் வேண்டும்.

(3) மாகாண சபைக்கு கிடைத்த காணியில் அல்லது அரச காணிக்கு அனுமதியின்றி உரிமை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் இலக்க 7ஆம் இலக்க அரச காணி (உரிமை திரும்பப் பெறுதல்) சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வாறே ஏற்புடையதாகும்.

33.(1) மேல் மாகாண சபை மூலம் மாகாண காணி ஆலோசனை சபையொன்று உருவாக்கப்பட வேண்டியதுடன், அந்த ஆலோசனை சபை மாகாணத்தினுள் உருவாக்கி மாகாண சபைக்கு உரித்தான காணி உபயோகம் மற்றும் தொடர்பு மாகாணக் கொள்கை தயாரித்தல் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டும். மாகாண காணி நியதிச்சட்டம் 9 வது உப பட்டியலில் 1 ஆகிய பட்டியலில் 11 வது அனுபந்தம் 33.4 உப பிரிவின்கீழ் உருவாக்கப்பட்ட தேசிய காணிக் கொள்கைக்கு இசைவாக இருக்க வேண்டும். மேல் மாககாண காணி ஆலோசனை சபையொன்றை உறுவாக்குதல்.

(2) இந்த ஆலோசனைச் சபை பின்வரும் விடயங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகளால் உள்ளடக்கப்பட வேண்டும்:-

(அ) காணி உபயோகத்திட்டம்;
(ஆ) மத்திய விவசாய மற்றும் மாகாண விவசாயம்;
(இ) பெருந்தெருக்கள் மற்றும் மாகாண நீர்ப்பாசனம்;
(ஈ) உள்ளூராட்சி;
(உ) அளவுகள்;
(ஊ) வனப்பாதுகாப்பு;
(எ) வன உயிரினங்கள்;
(ஏ) விவசாய சேவை;
(ஐ) சுற்றாடல் பாதுகாப்பு;
(ஒ) தொல் பொருள்;
(ஓ) பௌதீக திட்டம்;
(ஔ) நகர அபிவிருத்தி.

(3) மேல் கூறப்பட்ட 2 ம் பிரிவில் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பகுதி பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரச அதிகாரிகள் அல்லாத விசேட அறிவுள்ள அறிவாளிகள் நான்கு பெயர் இந்த சபையில் உறுப்பினராக இருக்க வேண்டும்:-

(அ) இயற்கை வளங்கள் முகாமைத்துவம்;
(ஆ) சமூக விஞ்ஞானம்;
(இ) பொருளியல்;
(ஈ) சட்டப்பகுதி.

(4) அமைச்சின் செயலாளர் இந்த சபையில் தலைவராக இருப்பதுடன், மாகாண காணி ஆணையாளர் அதன் செயலாளராக இருக்க வேண்டும். அதற்கு மேலாக மாகாணத்தில் மாவட்ட செயலாளர்கள் பதவி அதிகாரத்தின் மூலம் இந்த ஆலோசனை சபையில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

*மாகாண காணி ஆலோசனை சபையின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகள்.*

34.(1) மாகாண காணி ஆலோசனை சபைக்குள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட காரணங்கள் அடங்கும்:-

(அ) காணி உபயோகம் தொடர்பாக மாகாண கொள்கை தீர்மானிப்பது மற்றும் வெளியீடு செய்தல்;

(ஆ) மாகாணத்தினுள் உள்ள அரசாங்க காணி எந்தவொரு நபருக்கு அல்லது அமைப்புகளுக்கு ஒப்படைத்தல் அல்லது பெற்றுக்கொடுத்தல் செய்யும்போது குறிப்பிட்ட மாகாண சபையில் ஆலோசனை அந்த காரணத்தை கட்டுப்படுத்துகின்ற சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அனுப்புதல்;

(இ) அமைச்சர் மூலம் அனுப்பப்பட்ட காரணம் தொடர்பாக விசாரணை செய்து சிபாரிசு சமர்ப்பிக்க வேண்டும்;

(ஈ) தேசிய காணி ஆணைக்குழு மூலம் தேசிய கொள்கைக்கு அமைவாக மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட காரணம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல்;

(உ) தேசிய கொள்கையொன்று தயாரிக்கும்போது அது தொடர்பாக மாகாணத்திற்காக கவனிக்க வேண்டிய விடயங்கள் தேசிய காணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

*விதி தயாரித்தல்.*

(2) தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பாக தேவையானதாக இருக்கும் தரவுகள் அறிக்கை, வரைபடம், பட்டியல் மற்றும் தேசிய காணி ஆணைக்குழு மூலம் தேவையென்று கணிக்கப்படும் வேறு விபரங்கள், விதப்புரை மற்றும் மதிப்பீடு வழங்கும் மாகாண சபையில் எந்தவொரு அதிகாரி மூலம் அல்லது நிறுவனத்திற்கு பணிப்பதற்கு உப அதிகாரம் உள்ளது.

(3) ஆலோசனை சபைத் தலைவர் செயலாளர் மற்றும் பதவி அதிகாரத்தின் மூலம் நியமிக்கப்படவேண்டிய உறுப்பினர் தவிர்ந்த மற்ற உறுப்பினர்களை நியமிப்பது அமைச்சரவையின் விதப்புரையின் மூலம் மாகாண ஆளுனர் மூலம் நியமிக்கப்படல் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று வருடங்களுக்கு மேற்படாமல் இருப்பதோடு, அந்தக்காலம் கடைசியில் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு உரிமை உள்ளது.

35.(1) இந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விதி மாகாண காணி ஆலோசனை சபையின் ஆலோசனையின்படி அமைச்சர் மூலம் உருவாக்கப்படல் வேண்டும்.

(2) மேல் (1) ஆம் பிரிவின்கீழ் அமைச்சர் மூலம் உருவாக்கப்பட்ட எல்லா விதியும் வர்த்தமானப்பத் திரிகையில் பிரசுரிக்கப்படுவதோடு அவ்வாறு பிரசுரித்த பின் அதற்கு அனுமதி கொடுத்தல் தொடர்பாக இயன்றளவு அவசரமாக பிரேரணையொன்றின் மூலம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(3) இந்த பிரிவின்கீழ் செய்யப்படும் எந்தவொரு விதியும் மாகாண சபை மூலம் அனுமதி அளிக்கப்படும் வரை மற்றும் அந்த அனுமதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் வரையும் செல்லுபடியற்றதாகும்.

36. இந்த நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திகதிக்கு மேல் மாகாண சபையின் 2001 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க காணி அபிவிருத்தி நியதிச்சட்டம் வலுவிலக்கச் செய்தல்.

37. வாக்கியம் தொடர்பாக எந்தவொரு இசைவு ஏற்பட்டால் மட்டுமே இந்த நியதிச்சட்டத்தில்

"அமைச்சரவை" என்பது மேல் மாகாண அமைச்சரவை என்றும்

"அமைச்சர்" என்பது மேல் மாகாண காணி விடயப்பொறுப்பு அமைச்சராகும்.

"செயலாளர்" என்பது மேல் மாகாணத்தில் காணி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்றும்.

"அனுமதிப்பத்திரம்" என்பது காணி விடயம் சம்பந்தமாக எழுத்து மூல சட்டத்தின்கீழ் குறிப்பிடப்படும் அனுமதிப்பத்திரமாகும்.

"அனுமதிப்பத்திரம் பெறுநர்" என்பது காணி விடயம் சம்பந்தமாக எழுத்து மூலம் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் கிடைத்த நபரொருவரோ அல்லது நிறுவனமோ அல்லது அமைப்போ.

"அரசாங்கம்" என்பது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு அமைய அதிகாரத்திற்கு நியமிக்கப்படுகின்ற அரசாகும்.

"காணி " என்பது,

(அ) இயற்கையான அல்லது செயற்கையான அல்லது எந்தவொரு நீரேந்துப்பகுதியில் இந்நிலப்பரப்பு உள்ளடங்கும் பூமியும்.

(ஆ) பூமிக்கு தொடர்பாக உள்ள அல்லது அவ்வாறு பூமிக்கு தொடர்புபட்டுள்ளவைகளுக்கு நிரந்தர தொடர்புபட்டுள்ள ஏதாவது ஒன்று.

(இ) காணிக்கு உள்ள ஏதாவது உரிமையும் அல்லது காணியில் செய்கைபண்ணப்பட்டு இருக்கின்ற அல்லது செய்வதற்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற எந்தவொரு நெற்செய்கை தொடர்பானது.

"காணி கையளிப்பானது" என்பது இந்த நியதிச்சட்டத்தின்கீழ் காணி கையளிப்பதானது.

"காணி கச்சேரி " என்பது இந்த நியதிச் சட்டத்திற்கு உட்பட்டு காணி பெறுநர்கள் தேர்ந்தெடுத்தல் சம்பந்தமாக நடத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சையாகும்.

"உரித்தளித்தல்" என்பது அரசியலமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்ட பொருள் விளக்கமாகும்.

"காணித்துண்டு" என்பத இந்நியதிச்சட்டத்தின்கீழ் பங்கிட்டு வழங்கப்பட்ட காணி அல்லது அதில் எந்தவொரு காணித்துண்டு.

"காணி அதிகாரி" என்பது இந்த நியதிச்சட்டத்தில் 12 வது பிரிவின்கீழ் நியமிக்கப்படும் அதிகாரி ஒருவரும், குறிப்பிட்ட விளக்கத்துடன் எடுத்துக்கொண்டால் அதன் விளக்கம் என்னவென்றால் ஏதாவது விசேட காணியொன்று தொடர்பாக செயற்படுகின்ற அதிகாரி ஒருவராகும்.

"காணிபெறுநர்" என்பதன் இந்த நியதிச்சட்டத்தின்கீழ் காணி பெறுவதற்கு தெரிவு செய்யப்படும், காணி கிடைத்த நபர் ஒருவர் அல்லது நிறுவனமோ அமைப்போ ஆகும்.

" மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் காணி " என்பது அரசியலமைப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மாகாண சபைக்கு பெற்றுக்கொடுத்ததென்று கருதப்படும் காணி என்றும் மாகாண சபை மூலம் பொறுப்பேற்றுக் கொள்ளப்படும் காணி

என்றும் கருதப்படும்.

38. இந்த நியதிச்சட்டத்திலே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய வசனங்களுக்கிடையில் எந்தவொரு இசைவும் ஏற்படாவிட்டால் அந்தச் சந்தர்ப்பத்தில் சிங்களமொழி வசனமே அதிகாரப்படுத்தப்படும். இசைவு ஏற்படாத பட்சத்தில் சிங்களமொழி வசனமே வலுப்பெறும்.

3-309